விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 19 ஜுலைகஜ் 7 இதழ் 202
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-9-84

நீதிமன்றத்தைப் பகிஷ்கரித்த சட்டத்தரணிகள்



# யாழ்ப்பாண சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைபகிஷ்கரிக்கனர்!

(யாழ்ப்பாணம்)

**நீதிமன்றங்களை இம்மாதம் மூன்றும் திகதி (நேற்று) முதல் ஏழாம் திகதி வரை பகிஷ்கரிப்பது என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் ஒருமனதாகத் தீர்மானித்துள்ளனர்.**

யாழ் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில், சட்ட நூலகத்தில், நேற்று நண்பகல் நடந்த கூட்டத்தில் கீழ் காணும் தீர்மானமும் நிறை வேறியது.

''கடந்த காலத்தில் வட பகுதியில் நடைபெற்று வரும் பாரதூரமான வன்செயல்களை கண்டிக்குமுகமாகவும் அதே நேரம் குறிப்பாகசட்டத்தரணிகள் தங்கள் கடமைகளை பார்ப்பதற்கு முடியாத நிலையில், இருப்பதையும், அவர்கள் தாக்கப்படுவதையும். இல்லங்கள், பெறுமதி வாய்ந்த தஸ்தாவேஜுக்கள் எரிக்கப்படுவதையும் அரசு நிறுத்த வேண்டும் என்று கோருவதாகவும், இம்மாதம் 3ம் திகதி முதல் 7ம் திகதி வரை நீதிமன்றங்களுக்குச் செல்லாது பகிஷ்கரிக்க வேண்டுமென ஏகமனதாக இச்சபை தீர்மானிக்கிறது.''

இதன் பிரதிகளை ஜனுதிபதி, நீதியமைச்சர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர், பிரதம நீதியரசர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் ஆகியோருக்கு அனுப்புவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## மல்லாகத்திலும் பகிஷ்கரிப்பு

மல்லாகம் நீதிமன்றத்தை நேற்று சட்டத்தரணிகள்பகிஷ்

(8-ம் பக்கம் பார்க்க)

## வழக்குகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்றம், யாழ். நீதவான் நீதிமன்றம், யாழ். மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றுக்கு நேற்றுச் சட்டத்தரணிகள் செல்லாமல் பகிஷ்கரித்தனர். இம்மூன்று நீதிமன்றங்களிலும் நேற்று விசாரணைகள் நடைபெறவில்லை வழக்குகள் யாவும் ஒத்திப்போடப்பட்டன,

நேற்றுக்காலை, யாழ். மேல் நீதிமன்றம், மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் கூடியது.

அரசசட்டத்தரணி நீதிமன்றம் வந்திருந்தார். மற்றச் சட்டத்தரணிகள் எவரும் சமுகமளிக்கவில்லை.

வெற்றிலைக்கேணி கொலை வழக்கு, துன்னலை கொலை வழக்கு ஆகியவை நேற்று விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படவிருந்தது இவ்வழக்குகளின் எதிரிகள் நேற்று ஆஜராகவில்லை. சட்டத்தரணிகளும் நேற்றுப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்ததினுல் இருவழக்குகளிலும் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். சிறீசிவாயா நீதிமன்ற சட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## பாதிக்கப்பட்ட இடங்களை 'சிவா' பார்வையிட்டார்

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறையில் இடம் பெற்ற சம்பவத்தின்போது பாதிக்கப்பட்ட இடங்களை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் பார்வையிட்டார்.

எரிக்கப்பட்டுள்ள கடைகளையும், வீடுகளையும் திரு சிவசிதம்பரம் பார்வையிட்டுக் கொண்டிருந்த அதே நேரத்திலேயே சில வீடுகள், கடைகள் எரியூட்டப்படுவதைக் கண்டதாக அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினுர்.

மல்லாகம் நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதிமன்றங்களின் முன்னிலையில் பகிஷ்கரித்த சட்டத்தரணிகளையும் திரு சிவசிதம்பரம் நேற்று சந்தித்து உரையாடினுர்.

## தபாலகத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி தபால் அலுவலகம் துப்பாக்கி முனையில் இனந்தெரியாத நபர்களால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றபோதிலும், இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கொள்ளை அடிக்கப்பட்ட பணத்தின் தொகை தெரிவிக்கப்படவில்லை.

யாழ். தபால் அத்தியட்சகரும் மற்றும் தபால் அதிகாரிகளும் குறிக்கப்பட்ட தபால் நிலையத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மா)

## ஹஜ்ஜுப் பெருநாள்

(கொழும்பு)

ஹஜ்ஜுப் பெருநாள் இம்மாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் இரத்தாக்ஷி வருடம் ஆவணி மாதம் 21-ம் நாள் (6-9-84) வியாழக்கிழமை காலை 11-30 மணி முதல் 1-30 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எனது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **வெற்றிவேலுப்பிள்ளை** | **சத்தியவதி** |
| B.A. (Hons.) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |
| [உதவி ஆசிரியர், ஈழநாடு] | [உதவி முகாமையாளர் ஸ்ரீ காந்தா அச்சகம்] |

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராகச் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி | ச. குமாரசாமி |
| ஜெ. திருச்செந்தூர் | தம்பதிகள் |
| வட்டு - மேற்கு, | 19/1, ஐயனர் கோவிலடி, |
| வட்டுக்கோட்டை. | வண்-மேற்கு, யாழ்ப்பாணம். |

1591

✳ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

## நூல்நிலையம் முற்றுகதீக்கிரை:

### பழைய மாணவர் சங்கம் அரச அதிபருக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூல்நிலையம் முற்றுக தீக்கிரையாகி விட்டதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

கல்லூரி பழையமாணவர்சங்க தூதுக்குழு நேற்று அரச அதிபரைச்சந்தித்து கல்லூரிசேதம் குறித்து முறையிட்டதுடன் கல்லூரிப்பகுதியிலிருந்து ராணுவத்தினரை வெளியேற்றநடவடிக்கை எடுக்குமாறு கோரியது.

கல்லூரிக்கு அருகேயுள்ள கட்டிடத்தில் ராணுவத்தினர் முகாமிட்டிருப்பதால மாணவர்கள் கல்லூரிக்கு செல்ல அஞ்சுவதால் அவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. எனவே இப்பகுதியிலிருந்து ராணுவத்தினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு இந்தத்தூதுக்குழு அரச அதிபரிடம் கோரியது.

பழையமாணவர் சங்கத்தலைவர் சட்டத்தரணி ஆர், ருத்திரா, செயலாளர் சட்டத்தரணி ஆர் டி. இரத்தினசிங்

[8 ம் பக்கம் பார்க்க]

## அன்னை திரேசா இலங்கை விஜயம்

(கொழும்பு)

அன்னை திரேசா எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை வருகிறுர் கொழும்பு அதிமேற்றிராணியார் வணநிக்கலஸ்மார்க்கஸ் பெர்ணுண்டோவின் அழைப்பை ஏற்று அன்னை இலங்கை வருகிறுர்.

## பி. எஸ். செட்டியார் காலமாணர்

(கே. ஜி. எம்)

பிரபல பத்திரிகையாளரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு. பி. சுப்பிரமணியன் செட்டியார் (பி. எஸ். செட்டியார்), நேற்று முன்தினம் லொஸ் ஏஞ்சல்ஸில் காலமானுர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

தனது ஆரம்பகாலத்தில் 'சுதந்திரன்' 'வீரகேசரி' பத்திரிகைகளில் சிறப்பானமுறையில் பணியாற்றிச் சிறந்த பத்திரிகையாளன் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்ட பி. எஸ் செட்டியார் 1951-ம் ஆண்டில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தகவல் பிரிவில் சேர்ந்து, இருபத்திரண்டுஆண்டுகள் கடமையாற்றி 1973-ல் ஓய்வுபெற்றுர்.

ஒருகால கட்டத்தில், சர்வதேச் தூரிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சராக விளங்

(8ம் பக்கம் பார்க்க)

## ...ரி விளம்பரம்

### தேவை

அப்பள வேலையில் நன்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. நாளுக்கு 20 முதல் 25வரை சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். S. செல்வராணி புலவனார்வீதி, கல்வியங்காடு.
1593

தெல்லிப்பளையில் அமைந்துள்ள மின் மோட்டார் தொழிற்சாலைக்கு 45வயதிற்கு மேற்பட்ட எழுதுவினைஞர் ஒருவர் உடன் தேவை. தெல்லிப்பளை சுற்றுடலில் வசிப்பவர் விரும்பத்தக்கது. 10-9-84க்கு முன்விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1596 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1596

### விற்பனைக்கு

நல்லூர் சந்தைக்கு அருகாமையில் ¼ பரப்புக்காணி (இரு குழாய்க் கிணறுகளுடன்) பகல் 12 மணிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும். 966, பருத்தித்துறைவீதி, நல்லூர். 1531

உருத்திரவீணைநேர்த்தியான நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: பேபி போட்டோ, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி. 1594

நல்லநிலைமையிலுள்ள 11ஸ்ரீ தொடரிலக்கமுள்ள ஃபோட் அங்கிலியா (Ford Anglia) கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 155, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.
1592

## அடைக்கலமாதா உற்சவம்

(சுண்டிக்குளி)

சரித்திரப்பிரசித்தி பெற்ற யாழ். புனிதஅடைக்கலமாதா தேவாலய வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் முப்பதாம் திகதி ஆரம்பமானது. அடுத்த எட்டாம் திகதி காலைப்பூசை, திருச்சுரூபப்பவனியுடன் இத் திருநாள் முடிவுறும் இத் திருநாளை பங்குத் தந்தை வண. பிதா ஏ. அருமைநாயகம் நடாத்திவைப்பார்.

சென்ற ஏப்பிரல் மாதம் இவ்வாலயத்தின் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள்

[புலோலி]

பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தின் புதிய உத்தியோகத்தர் நிலைநிறுத்தற் கூட்டம் லயன் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பல பகுதிகளின் லயன்ஸ் கழகங்களின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கழகத்தலைவராகலயன் டாக்டர் எம். கே, முருகானந்தனும் முதலாவது உப தலைவராக லயன் என். பாஸ்கரனும் இரண்டாவது உப தலைவராக லயன் டாக்டர் ரீ கதிரவேற்பிள்ளையும் மூன்ருவது உபதலைவராக லயன் டபிள்யூ. என். எஸ். சாமுவேலும், செயலாளராக லயன் பீ. சிவயோகசுந்தரமும் பொருளாளராக லயன் ஏ. சோமசுந்தரம்பிள்ளையும், இயக்குனர்களாக பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் லயன்கே. நடனசபாபதி, லயன் எம். பி. வீரவாகு (ஜே.பி) லயன் டாக்டர் எஸ், பாலகிருஷ்ணன், ஆகியோரும் அறிக்கை ஆசிரியராக லயன் சீ. சிவராஜசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# போஷாக்கு வாரம்

## மாணவர் மத்தியில் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ் திட்டமிடல் பிரிவும், கல்வித்திணைக்களமும் இணைந்து யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான போஷாக்குணவு வாரப் போட்டிகளை நடாத்த முடிவு செய்துள்ளன.

திட்டம் செயற்படுத்தல் அமைச்சின் உணவுப்போஷாக்குப் பிரிவின் உணவுப், போஷாக்கு வாரத்தை முன்னிட்டு இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன. ஒக்ரோபர் மாதம் 29ம் திகதியிலிருந்து நவம்பர் மாதம் 2ம் திகதி வரை போஷாக்கு வாரம் கொண்டாடப்படும்.

மாணவர்கள் மத்தியில் போஷாக்குத் தொடர்பு சம்சந்தமான அறிவைப்பரப்புவதும், அவர்களுக்கு ஊடாகக் குடும்பங்களுக்குப் பரப்புவதுமே பாடசாலைகளுக்கு இடையேயான போஷாக்கு வாரப்போட்டிகளின் நோக்கம் என்று யாழ் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு.க. சிவதாசன் தெரிவித்துள்ளார்.

முதலில் பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்படும் போஷாக்கு வாரப் பேச்சு, கட்டுரை. கவிதை, சுவரொட்டிப்போட்டிகள் பின்னர் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்படும். இந் நான்கு வகையான மாவட்டப் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொள்பவர்களுக்கு முறையே 150 ரூபா, 100ரூபா 25 ரூபா வீதம் பரிசளிக்கப்படும்.

இப் போட்டிகளுக்கான ஒழுங்குகளைத் ... திட்டமிடல் அதிகாரி திரு. வி. செ.சுவாமிநாதன் மேற்கொண்டு வருகிறார்.

## தீவிர பிரச்சாரம்

(சாவச்சேரி)

கைதடி, மட்டுவில், கைதடி நுணுவில் பகுதிகளில் தீவிரமடைந்து வரும் கசிப்பு உற்பத்தியை தடை செய்யும் பொருட்டு இப் பகுதி பொது ஸ்தாபனங்கள தீவிர பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

இப் பொது ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுக்கு, சாவகச்சேரிப் பகுதி, உதவி அரசாங்க அதிபர்திரு.க. துரைராசா கிராம சேவையாளர்கள் விசேட சேவை அலுவர்கள் ஆகியோர் ஆதரவு நல்கி வருகின்றனர்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசிங்கம் கைம்பெண் விமலாதேவியின் மரணசாதனமில்லாச் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவம் கோரிச் செய்த மனு சம்பந்தமாக

— மரணமெய்தியவர் பொன்னையா தேவதாசன் சங்குவேலி, — மனுதார்

மரணச் சொத்துரிமை நியாயாதிக்கம் இல: T 204

எதிர்

(1) பாலசிங்கம் மகள் தயாநிதி,

(2) பாலசிங்கம் நவநிதி, (பராயமடையாதவர்கள்)

(3) பாலசிங்கம் மகள் சுகந்தினி, (பராயமடையாதவர்கள்)

2-ம், 3-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்கள் இவர்களின் பாதுகாவலர்.

(4) பொன்னையா கணேசன் எல்லோரும் சங்குவேலி.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுஅதில்அதற்கிணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1984-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதுஎன்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்ருர்கள்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

1984-ம் ஆண்டு ஆனிமாதம் 11-ம் திகதி,
என்னுல் வரையப்பட்டது.
எஸ். இராசேந்திரம்,
மனுதாரின் சட்டத்தரணி
1590

## கூட்டுறவுச் சங்கத்தில் கொள்ளை

[சாவகச்சேரி]

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் இருபதினுயிரம் ரூபாயினை மூன்று இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சங்கத்துக்குச் சொந்தமான லொறியில் சங்க ஊழியர்கள், கூட்டுறவுக் கிளைகளில் இருந்து சேகரித்து வந்த பணமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டதாகும்

இக்கொள்ளை சம்பந்தமான புலன் விசாரணையை சாவகச்சேரி பொலிசார்மேற்கொண்டு வருகின்றனர்.

## குண்டெறிதலில் மூன்ருமிடம்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் குருநாகலில் அண்மையில் நடை பெற்ற அகில இலங்கை தேசிய விளையாட்டு போட்டிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சார்பில் பங்கு பற்றிய ஊர்

(7ம் பக்கம் பார்க்க)

SCIENCE CENTRE
KARAVEDDY
புதிய வகுப்புக்கள்க. பொ. த. (உயர்தரம்)85 (August)
க. பொ. த. (உயர்) (தரம்II) 86 (August)
ஆரம்பம்: 5-09-1984
(1505)

உ

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் சி பரம்சோதி
(Transport Officer K. G. Groups)
மணமகள்:
செல்வி நா. மனேரஞ்சிதம்
(ஆரம்ப நீதிமன்றம், மல்லாகம்)
இடம்:
இராஜபவான், ஸ்ரேசன் ரோட், கொக்குவில்
காலம்:
6-9-84 வியாழக்கிழமை
நேரம்:
காலை 6-52 முதல் 8 28 வரை
வரவேற்பு:
மணமகன் இல்லம் மாலை 3-00 மணி
அழைப்பு:

திருமதி
அ. சின்னத்தம்பி,
விசவெட்டி,
அளவெட்டி.
(மணமகன் இல்லம்)

திருமதி
பொ. நாகரத்தினம்,
'இராஜபவான்',
ஸ்ரேசன் ரோட், கொக்குவில்.
(மணமகள் இல்லம்)

(1588)

## அகால மரண அனுதாபச் செய்தி

### கப்டன் C. மோகனதாஸ்


எமது பணியகத்தின் நெடுநாளைய அங்கத்தவரும், எமதுஸ்தாபனத்தின் அபிமானியும், எமது ஸ்தாபனத்தினர் அனைவரையும் தம் அளவு கடந்த அன்பால் ஈர்த்தவருமாகிய பெருமகன் யாழ். ஷெல்கோமறைன் கம்பனி நிர்வாக இயக்குநர் கப்டன் C, மோகனதாஸ் அவர்கள் 1984 செப்ரெம்பர் முதலாம் திகதி அகாலமரணமெய்தியது குறித்து எமது ஆற்றெணுத்துயரத்தையும் அன்னர் குடும்பத்தினர் உற்ருர், உறவினர்க்கு எமது நெஞ்சம் நெகிழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அன்னர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கிருேம்.

யாழ். குளோபல்

(1597)

## 6-வது மாத நினைவஞ்சலி

### கந்தசாமி சிறிஸ்கந்தராசா



தோற்றம்: 10-7-1954
மறைவு: 4-3-1984

எதிர்பாராமல் அகாலமரணமடைந்த உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்ருர்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்,
அன்ரிமார்,
மழலைகள்: கஜன், மயூரு.

109/2, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்,
(1589)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

மணமகன்:
செல்வன் க. மகேந்திரலிங்கம்
(பங்காளர், யோகு ரேடிங்கோ, யாழ்ப்பாணம்)

மணமகள்:
செல்வி. மு. நாகேஸ்வரி

இடம்:
மணமகள் இல்லம்

காலம்:
6-9 84 வியாழக்கிழமை

நேரம்:
பகல் 12-00 மணி முதல் 1-00 மணி வரை

மணவாளக்கோலம்:
காலை 7-00 மணி முதல் 7-45 வரை
மணமகனின் இல்லம்

அழைப்பு:

திருமதி
கந்தையா காமாட்சி,
(மணமகனின் தாயார்)
சகோதரர்கள்,
'யோகபவனம்',
வேலணை மேற்கு, வேலணை.

திரு. திருமதி
பொ. முத்துத்தம்பி,
(மணமகளின் பெற்ருேர்)
உரிமையாளர்,
முத்துத்தம்பி அன் சன்ஸ்,
காலி.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை) (1601)

# பொற்கோயில் வரை எதிர்ப்பு

# ஊர்வலம் நடத்த முடிவு!

## 'சீக்கிய' மாநாட்டில் தீர்மானம்!

**அமிர்தஸரஸ், செப் 3 பஞ்சாப் பொற்கோயிலுக்கு பெரும் ஊர்வலமாகச் சென்று அங்குள்ளஇராணுவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்க சீக்கிய மத குருமார்கள் தீர்மானித்துள்ளனர். இவர்கள் தமது இம் மாபெரும்ஊர்வலத்தை அக்டோபர் மாதம் முதலாந் திகதி நடத்துவதெனவும் முடிவெடுத்துள்ளனர்.**

நேற்று அமிர்தஸரஸ் நகரில் சீக்கிய மத குருமார்களையும்; தீவிர சீக்கிய சமூகத்தவர்களையும் உள்ளடக்கிய மகாநாடொன்று இடம்பெற்றது. அமிர்தஸரஸ் பொற் கோயிலிருந்து ஒருமைல் தொலைவிலுள்ள சீக்கிய வழிபாட்டுத் தலமொன்றிலேயே இம் மகாநாடு கூட்டப்பட்டது. சுமார் ஐம்பதினாயிரம் பேர் இதில் கலந்து கொண்டனர்.

இம்மகாநாட்டின் இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களிலேயே அமிர்தஸரஸ் 'பொற்கோயில்' வளாகத்துக்கு ஊர்வலமாகச் சென்று அங்குள்ள இந்திய இராணுவத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

இம்மாபெரும் ஊர்வலத்தை தடுக்க தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், மற்றும் எத்தகைய தடை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் திட்டமிட்டவாறு இவ்வூர்வலத்தை மேற்கொள்வது என்று மகாநாட்டில் உறுதியாக முடிவெடுக்கப்பட்டது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இடம்பெற்ற இம் மகாநாட்டில்பொற்கோயிலிலிருந்து இராணுவம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும், பொற் கோயில் திருத்த வேலைகளை சுதந்திரமான சீக்கிய மதஸ்தாபனத்திடம் கையளிக்க வேண்டுமெனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஜூன் மாதத்தில் 'பொற்கோயில் வளாகத்தில் இந்திய இராணுவம் மேற்கொண்ட ஊடுருவலையும் இம் மகாநாடு கண்டித்தது. (கி)

---

### வவனியாவில் வெளியார் குடியேற்றம்:

## தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் வன்னி முன்னேற்றக் கழகம் கோரிக்கை

(வவனியா)

வவனியா மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி பகுதியில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களை குடியேற்ற இருக்கும் நடவடிக்கையினை தடுத்து நிறுத்தும்படி வன்னி முன்னேற்றக் கழகம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி கழகத்தின் நிர்வாகக்குழு கூட்டம் அண்மையில் கூடி குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அந்தமகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''அரசாங்க மத, சமூக, ஸ்தாபனங்கள் தற்போது தமிழர் பிரச்னையினை தீர்க்க எடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில், காணி உத்தியோகஸ்தர்களின் சில காலநேரமற்ற நடவடிக்கைகளால் இனப்பிரச்னை தீர்க்கும் முயற்சி பாதிக்கப்படுகின்றது.

இதன் சார்பாக பின்வரும் நடவடிக்கைகளை காணி உத்தியோகஸ்தர்கள் எடுத்துள்ளார்கள்.

''வவனியா மாவட்டத்திற்கும், வடமாகாணத்திற்கும் வெளியேயுள்ள 2000 குடும்பங்களை நெடுங்கேணியில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது அரசாங்கத்தாலும், ஜனாதிபதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு முரணானதாகும்.

''நெடுங்கேணியிலுள்ள விசேட குத்தகைமூலம் கொடுக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்தும் பயிர்ச்செய்கை செய்யப்பட்டதுமான பெரும்பகுதிக் காணியை திறந்தவெளி சிறை முகாம் அமைப்பதற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

''மதவாச்சி தொகுதியில் உள்ள இரு உதவி அரச அதிபர் பிரிவுகளை வவனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''மதவாச்சி எம். பி.யும், வவனியா தமிழ்மக்களின் தலைவர்கள் ஆகியோரின் பலத்த எதிர்ப்பினாலும் ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டு முன்னர் இதனை இடைநிறுத்தி வைத்தார்.

''இத்தகைய நடவடிக்கைகள் தற்போது அரசினால்இனப் பிரச்னையை தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தடையாகஉள்ளன.

இது தவிர வவனியாவில் நூற்றுக்கணக்கான படித்த வேலையற்ற காணியற்ற இளைஞர்கள் இருக்கின்றார்கள் இவர்கட்கு இக்காணியை பகிர்ந்து கொடுத்த விவசாயத்தை விஸ்தரிக்கலாம். ஆகவே ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டு சுமுகமான ஒரு தீர்வை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்'' என்றும் வன்னி முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. முத்தையா நடராஜா மகஜரில் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கும் பிரதிகள் தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கும், காணி அபிவிருத்தி அமைச்சருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கழகம் ஒரு அரசியல் சம்பந்தமற்ற ஸ்தாபனம் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

---

# ரூபவாஹினி

மாலை

5-30 மைட்டி மௌஸ் [ஆங்கிலம்]

6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்]

6-30 'அவள் ஒரு ஜீவநதி' உள்ளூர்த்திரைப்படம் [தமிழ்]

6-55 செய்திகள் [தமிழ்]

7-15 மகாவலி விவரணச் சித்திரம்

7-45 'கோட்ரெட்' [ஆங்கிலம்]

8-15 செய்திகள் [சிங்களம்]

8-35 'கோட்ரெட்' தொடர்ச்சி

9-00 'டிபரன்ற் ஸ்ரோக்ஸ்' [ஆங்கிலம்]

9-30 செய்திகள் [ஆங்கிலம்!

9-50 'பிக்வலி' [ஆங்கிலம்]

10-30 உலகச் செய்திகள்

10-35 பிக்வலி தொடர்ச்சி

10-45 நிகழ்ச்சிகள் முடிவு

## தேர்த் திருவிழா

(கல்வியங்காடு)

அரியாலை சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா இம்மாதம் 9ந் திகதி நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

---

### இந்தியவிமானக் கடத்தல்

## கடத்தல்காரர்கள் மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பு!

புதுடில்லி, செப் 3

டுபாயில் சரணடைந்த ஏழு இந்திய விமானக் கடத்தல்காரர்களும் மீண்டும் இந்தியாவிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டனர். வெளிநாடொன்றில் தஞ்சம் புகுந்த இந்திய விமானக் கடத்தல்காரர்கள் மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது இதுவேமுதல் தடவை என்று கூறப்பட்டது.

டுபாயிலிருந்து விசேட விமானமொன்றில் இந்திய விமானக்கடத்தல்காரர்கள் 7 பேரும் இன்று அதிகாலை புதுடில்லி கொண்டுவரப்பட்டனர். இவர்களை இந்திய பாதுகாப்புச் சேவையினர் பெயர் குறிப்பிடப்படாத இடமொன்றிற்கு அழைத்துச்சென்றனர். விரைவில் இவர்கள் மீதான விசாரணைகள் ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 24ம் திகதி இந்திய 'போயிங் 737' விமானம் சண்டிகாரிலிருந்து ஸ்ரீநகர் செல்லும்வழியில் கடத்தப்பட்டது பின்னர் இவ்விமானம் பாகிஸ்தானில் லாகூரிலும், கராச்சியிலும் தரையிறக்கப்பட்டு, டுபாய்க்கு திசைதிருப்பப்பட்டது. அங்கு விமானக் கடத்தல்காரர்கள் சரணடைந்தனர்.

விமானக் கடத்தல்காரர்கள் தம்மை அமெரிக்கா செல்ல அனுமதிக்கும்படி டுபாய் அரசிடம் கோரியிருந்தனர். இதனையடுத்து அமெரிக்க, இந்திய ராஜதந்திரிகளுடன் டுபாய் அரசு பேச்சுக்களை நடத்தியது. இறுதியாக கடத்தல்காரர்களை இந்தியாவிடமே ஒப்படைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இந்தியா இந்த முடிவைப் பாராட்டி டுபாய் அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளது. (க)

---

# தூரகிழக்கில் மோசமான சூறாவளி

## உயிர்சேதங்களுடன் ஆயிரக்கணக்கானோர் வீடிழப்பு

சியோல், செப் 3

தூரகிழக்கு ஆசியப் பகுதியில் பெரும் புயல் காற்றினாலும், கடல் கொந்தளிப்பினாலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பிலிப்பைன்ஸில் வீசிய புயலினால் கடற்கரையோரப்பகுதி வீடுகள் பல உவ் நீரினால் அடித்துச் செல்லப்பட்டன. இத்துடன் பலவீடுகள் வெள்ள நீரினால் மூடப்பட்டன.

இங்கு இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்துள்ளனர். பலர் உயிரிழந்துள்ளதுடன் பலத்த காயங்களுக்குமுள்ளாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மணிக்கு 200 கிலோ மீட்டர்கள் வேகத்தில் பிலிப்பைன்ஸில் சுழல் காற்று வீசியுள்ளது.

தென் கொரியாவிலும் காற்றினாலும், அதனைத் தொடர்ந்து கடல் கொந்தளிப்பினாலும் பெருஞ் சேதங்கள் ஏற்பட்டுள்ளன, 120 பேர் கொல்லப்பட்டுள்ளனரென்றும் 1000 பேர் வரை காயமடைந்துள்ளனர் என்றும் 75 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. காணாமல் போனவர்களில் பலர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. பல கோடிக்கணக்கான டாலர்கள் சேத மேற்பட்டுள்ளன. தென் கொரிய அரசு மீட்புப்பணிகளையும், நிவாரண வேலைகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. (கி)

---

## "சமுதாயப்பணி புரிபவர்க்கு முதலுதவிப் பயிற்சி அவசியம்"

[சாவகச்சேரி]

''சமுதாயப் பணிகளில் ஈடுபடும் அனைவரும் அவசியமாக முதல் உதவி சிகிச்சை பற்றிய ஆரம்ப அறிவுகளைத் தெரிந்து வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும். விபத்து,ஆபத்து நடைபெறும் கட்டங்களில் பாதிப்புக்குள்ளாகின்றவர்களுக்கு முதலில் முதல் உதவிச் சிகிச்சை அளித்தல் மூலம், அதர்களைமரணத்தின்வாயிலில் இருந்து காப்பாற்றிக்கொள்ள இவ்வகையான பயிற்சிகள் பயன்தரும்.''

இவ்வாறு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவின் மாகாண ஆணையாளர் திரு சீ.எஸ் சுப்பிரமணியம் கைதடியில் நடைபெற்ற முதல்உதவிப் பயிற்சி முகாமின்போது தெரிவித்தார்

அறவழிப் போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சி முகாமில் சாவகச்சேரித் தொகுதியில் உள்ள கிராமியநிறுவனங்களில் இருந்து சுமார் 50 தொண்டர்கள் பங்குபற்றினர்.

இவர்களுக்கான இறுதிப் பரீட்சையை, சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. சோமசுந்தரம் நடாத்தினார்.

பயிற்சிப் பொறுப்பாளர் திரு. ச. தங்கராசா பயிற்சிக்கான சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் இம் மாதம் 6 ம்திகதி வியாழக்கிழமை பண்டத்தரிப்பு வடலியடைப்பு வெள்ள வாய்க்கால் சிரமதான மூலம் புனரமைப்பு செய்வதென்று தீர்மானித்துள்ளது.

சங்கத் தலைவர் திரு மு நடராசா தலைமையில் நடைபெறும் இச் சிரமதானப் பணியில் கிராம சேவை அலுவலர் எஸ் சுந்தரமூர்த்தி கிராமஅபிவிருத்தி அதிகாரி திரு ஜெயகுமார் உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

---

### எஸ். டி. சோமசுந்தரத்தை

# அ. தி மு. க.விலிருந்து வெளியேற்றஎம்.ஜி. ஆர்.உத்தரவு!

## குற்றவியல் வழக்கும் தாக்கலாகுமாம்!

சென்னை செப் 3

தமிழ்நாடு சட்டசபை உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரத்தை அ தி மு க விலிருந்து வெளியேற்றும்படி அக்கட்சியின் செயலாளர் பா உ சண்முகத்துக்கு அ தி.மு க ஸ்தாபகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

அ.தி மு. வின் செயற் குழுவும் பொதுச்சபையும் எடுத்த முடிவையடுத்தே இந்த உத்தரவை திரு எம் ஜி ஆர் விடுத்தார்.

அமைச்சரவையிலிருந்து திரு சோமசுந்தரத்தை வெளியேற்றுவது பற்றிக் கேட்டபோது 'பொறுத்திருந்து பாருங்கள்' என்று திரு எம்.ஜி.ஆர் பதிலளித்தார்.

இதேவேளை திரு எஸ் டி சோமசுந்தரம் தமிழக ஆளுநர் குரானாவைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது

திரு சோமசுந்தரம் மீது தமிழக அரசு குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்யுமென்றும் அவர் அ.தி.மு.க மீது உருப்படியாக குற்றங்கள் எதனையும் சுமத்தவில்லை என்றும் திரு எம்.ஜி.ஆர் தெரிவித்துள்ளார்.

## மணிவாக்கு

தங்களைத் தவிர்ந்த மற்றெல்லோரையும் திருத்த முயலும் சீர்திருத்தவாதிகள் எம்மத்தியில் பலர் உளர்.

— ஆச்சாரிய விஞேபாபாவே

# நமதுநோக்கு

## சீரடையும் பொருளாதாரம்?

"கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலகம் கண்ட பொருளாதார வீழ்ச்சி 1980 — 83 காலத்திலேயே மிக மோசமானது" என்று உலக அபிவிருத்தி அறிக்கை 1984 குறிப்பிட்டிருக்கிறது.

1979—80இல் எண்ணெய் விலை இரண்டாவது தரம் உயர்ந்ததால்தான் இந்த வீழ்ச்சி ஏற்பட்டதல்ல. கடந்த 20 ஆண்டுகளில் அபிவிருத்தி அடைந்த, அடையும் நாடுகள் கடைப்பிடித்து வந்த இறுக்கமான நிதிக்கொள்கையும் மாற்றங்காணுத சம்பளத்திட்டமும் விலைவாசியுமே இன்று குணமடைவதுபோல் தெரியும் உலக பொருளாதார வீழ்ச்சியின் காரணமென்று இந்த அறிக்கை கூறுகின்றது.

பணவீக்கமும் வேலையின்மையும் இந்த வீழ்ச்சியின் பிரதான அறிகுறிகள்.

இவற்றைச் சமாளிக்கும் ஆற்றலின்மை இரு சாராரையுமே பீடித்திருந்தது — விருத்தி அடைந்த செல்வ நாடுகள், விருதியடையாத வறிய நாடுகள்.

செல்வத்தில் மிதக்கும் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஜப்பான் போன்ற பெரும் கைத்தொழில் நாடுகள் உலக பொருளாதாரத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்திவருகின்றன. இவற்றின் மந்தநிலை எங்கள் நாட்டைப்போன்ற அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு பாதகமாக இருந்து வந்தது; இன்றும் அந்த நிலை மாற்றமடையவில்லை.

வெளிநாட்டு உதவியிலும் வெளிநாட்டு முதலீட்டிலும் நம்பி வாழும் எமது நாடு, செல்வ நாடுகளிடம் படும் கடன் மிகப் பெரிய வட்டி விகிதத்தைக் கொண்டிருக்கிறது.

தங்கள் சீரழிந்த பொருளாதார நிலையில் தாராளமாகக் கடன் கொடுக்க முன்வந்தபோதும் வட்டி முதலைச் சாப்பிடும் வகையில் கடன் பழு ஏறிக்கொண்டு போகிறது.

அதுமட்டுமல்ல விருத்தியடையும் நாடுகளின் ஏற்றுமதியில் 65சதம் இந்த செல்வ நாடுகளே சந்தைப்படுத்துகின்றன. தங்கள் நிதிநிலை செவ்வனே செயற்படாத கட்டத்தில் அந்த நாடுகள் கடன்பட்ட நாடுகளின் உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்வதில் தயக்கம் காட்டுகின்றன; இந்த நிலையில் கடன்பட்டு நாட்டின் கைத்தொழிலை விருத்தி செய்வதுஎமதுநாடுபோன்ற நாடுகளுக்கு சாத்தியமாவதில்லை. எனவே வெளிநாட்டுச் செலாவணி அதிகரிப்பதில்லை.

'கடன் நெருக்கடி' என்ற பொறிக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றென்பதில் ஐயமில்லை.

முதலைத் திருப்பிக்கொடுக்கும் தொல்லை இந்த நாடுகளுக்கு உடனடியாக எழவில்லை. காரணம் கடந்த கால வட்டியே நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கிவரும் அபாயநிலையையணுகி வருகிறது. இக்காரணம் கொண்டே ஜனுதிபதி ஜெயவர்த்தன பழைய கடன் - வட்டி உட்பட செல்வநாடுகள் தங்கள் செலவில் எழுதிவிட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துவருகிறூர். இக்கோரிக்கை அணிசேரா மாநாடு தொடக்கம் ஐ.நா. வரைக்கும் கேட்குமளவிற்கு குரலெழுப்பி வந்திருக்கிறூர்.

உலக அபிவிருத்தி அறிக்கை 1984 - இன்றைய உலகம் நிதி வீழ்ச்சியிலிருந்து எவ்வாறு குணமடையலாமென்ற கேள்விக்கு பல தரப்பட்ட ஆலோசனைகள் வழங்கியிருக்கிறது.

ஜனத்தொகைப் பெருக்கம் வறியநாடுகளின முன்னேற்றத்துக்கு தடையாய் இருப்பதை இந்த அறிக்கை வற்புறுத்தியிருக்கிறது. இவ்விடயத்தில் கருத்து வேற்றுமை இருந்தபோதும் குடும்பத்திட்டம், குடும்பக் கட்டுப்பாடு, கிராமத்திலும் நகரத்திலும் மக்கள் சீராக-ஆரோக்கியமாக வாழ வழிவகுக்குமென்று கருதப்படுகிறது.

எங்கள் நாட்டின் பொருளாதார சங்கடம் பல வகைகளில் தனித்துவமானது. வருடாவருடம் பட்ஜெட்டில் துண்டுவிழும் தொகை மலைபோல் வளர்கின்றது. நல்லெண்ணம் படைத்த நேசநாடுகள் நிதி உதவியையும் கடனையும் தாராளமாக வழங்கிவந்திருக்கின்றன.

இதற்குரிய அபிவிருத்தி பாரிய திட்டங்களாகவே தொடர்கின்றன. தாராளமான இறக்குமதி கடனை அதிகரிக்கிறது. ஏற்றுமதி எத்துறையிலும் சிறப்படைய முடியவில்லை.

மக்கள் வாழ்க்கைத் தரம் இன்றைய விலையேற்றத்தில் மிகக் கீழ்நிலை அடைந்துள்ளது. செல்வர்களின் தொகை அதிகரித்தாலும், வறுமை கூடி வருவதே தினசரி அனுபவம்.

நாட்டைத் தலையெடுக்க விடாத இனப்பிரச்னை இந்த நிலையை மோசப்படுத்துவதை விளக்கவும் வேண்டுமா?

## ஆலயஉற்சவம்

[மட்டுவில்]

சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் கலுவம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 29ம் திகதி ஆரம்பமானது. 7ம் திகதி சங்காபிஷேகமும், அன்னதானமும். இரவு விநாயகர்திருவூஞ்சலும், வீதியுலாவும் நடைபெறும்.

## உயிர்காப்பு முகாம்

(மன்னூர்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னூர் மாவட்ட காரியாலயத்தினுல் பாலாவியில் நாலு நாள் உயிர்காப்பு பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இப் பயிற்சி முகாமில் மன்னூர், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 24 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் நீச்சல், சுழியோதல் போன்ற பயிற்சிகள் நடத்தப்பட்டன.

## இன்று நினைவுதினம்:

# உயிர்களை நேசித்த உத்தமர் டாக்டர் சுவைட்சர்

**[உயிர்களை உயர்வாக நேசித்தவரான டாக்டர் அல்பேர்ட் சுவைட்சர் இருளடைந்த ஆபிரிக்கக் கண்டத்தில் அநாகரிக மக்கள் மத்தியில் பணிபுரிவதற்காகவே மருத்துவக் கல்வியைக் கற்று அங்கு சென்று தம் வாழ்நாளையே அங்கு அர்ப்பணித்த பெரியார். — பி. எஸ். பி.]**

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் என்றூல் எவருக்கும் தெரியும்-ஆனுல் அல்பேர்ட் சுவைட்சர் என்றூல் பெரும்பாலானவர்கட்கு இப்போது தெரியாது!

அணுவைப் பிளந்து அணுக்குண்டைக் கண்டு பிடித்தவர் ஐன்ஸ்டீன். அதற்காகப் பின்நாட்களில் பெரிதும் கவலையுற்றூர். ஜப்பானில் முதலாவது அணுக்குண்டு விழுந்ததையடுத்து ஆயிரக் கணக்கான மக்கள் அமெரிக்காவுக்கு அகதிகளாக வந்து சேர்ந்த போது தாம் விட்ட தவறுக்காகக் கண்ணீர் விட்டழுதபடி அவர்களை வரவேற்று மன்னிப்புக் கோரினூர் ஐன்ஸ்டீன்.

சுவைட்சர் அணுவைத் துளைக்கவில்லை. ஆனுல் ஏழ்மையாலும், நோய்களாலும் நொடித்துப்போய்க் கிடந்த ஆப்ரிக்காக் கண்டத்தின்இருள் படர்ந்த காடுகளைத் துளைத்துக் கொண்டுசென்று மனித ஜீவன்களின் உயர்வுக்காகப் பாடுபட்டவர் அவர். இருவருமே உடல் அமைப்பிலும், உருவத்தோற்றத்திலும் ஒற்றுமையானவர்கள் இருவரின் பெயர்களும் அல்பேர்ட் என்றே ஆரம்பமாகின்றன. இருவரும் நோபல் பரிசுபெற்ற மேதைகள்.

ஒருமுறை சுவைட்சர் ஆபிரிக்க மக்களின்நல்வாழ்க்கைக்காக ஆமெரிக்காவில் நிதிசேகரிப்பதற்காக ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

ஒரு நிலையத்தில் ரயில் ஏற வருந இளம் கல்லூரி மாணவியர் கோஷ்டியொன்று அவரை ஐன்ஸ்டீன் என்று கருதி அதே பெட்டியில் ஏறினூர்கள். அவர் இருக்கும் அறையை அடிக்கடி கடந்து அவரைப் பார்த்துச் சென்றூர்கள். விடயத்தைப் புரிந்துகொண்ட சுவைட்சர், அவ்விளம்பெண்களை அழைத்து 'பெண்மணிகளே எனக்குப்புரிகிறதுநீங்கள் விடும்தவறு; நான் ஆபிரிக்காவிலிருந்து நன்கொடைகள் வசூலிப்பதற்காக வந்துள்ளவன் நீங்கள் ஐன்ஸ்டீன் என்று என்னைத் தவறுக நினைத்துவிட்டீர்கள் என்றுகூறி தமது தலையைக் காட்டி 'இதில் ஒன்றுமில்லை, ஆனுல் அவரது தலைக்குள்ளே இருப்பது அபாரமான மூளை' என்றூராம்.

ஆனுல் சுவைட்சர் தம்மைக் குறைத்துக் கூறிய அளவுக்கு குறைவானவர் அல்ல.

இளம் வயதிலேயே இறையியலில் டி.டி பட்டமும்,இசைத் துறையில் பி. எச். டி. பட்டமும் பெற்று மதபோதகராகவிருந்த சுவைட்சர் உயிர்களை நேசிக்கும் உத்தமராக விளங்கினூர்.

ஒரு தினம் வேதாகம சஞ்சிகையொன்றைப் படித்துக் கொண்டிருந்த போது அதிலிருந்த ஒரு செய்தி அவரைப் பெரிதும் கவர்ந்தது பெல்ஜியம் கொங்கோவிலும், பிரெஞ்சு ஆபிரிக்காவிலும் மருத்துவப் பணியாள்களுக்கு இருந்துவரும் தட்டுப்பாடு பற்றி சுவைட்சர் அக்கட்டுரையில் படித்தறிந்தார் உடனே தாமும் ஒரு மருத்துவராக வரவேண்டுமென்று முடிவு செய்தார். அதன் மூலம் ஆபிரிக்காவில் நோய்களால் மடிந்து கொண்டிருக்கும் மக்களுக்குப் பணிபுரியலாம் என்று முடிவெடுத்தார். அதன்பின் ஏழுஆண்டுகள் மருத்துவத்துறையில் பயிற்சி பெற்று எம். பி.,டி. எஸ். ஸி. பட்டங்களைப் பெற்றூர். மருத்துவத்தாதியாகவிருந்த ஒரு பெண்ணைத் திருமணம் புரிந்தார்.

மருத்துவத் துறையில் பணிபுரிவதற்கான சகல ஆயத்தங்களையும் செய்துகொண்டதையடுத்து ஆபிரிக்காவுக்குச் சென்று லம்பரீன் என்ற கிராமத்தில் தமது பணிமனையை அமைத்துக்கொண்டார்.

1875ம் ஆண்டு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவகுடும்பத்தில் சுவட்சர் பிறந்தார். சிறுவயதிலேயே அன்பும், பிறர் துன்பங்கண்டு இளகும் சுபாவமும் கொண்டவராக விளங்கினூர்.

மனிதர்கள் மாத்திரமல்ல மிருகங்கள் துன்பமுறுவதும் கூட அவரால் சகித்துக்கொள்ள முடியாமலிருந்தது. சகலவிதத்திலும் வசதிகள் பெற்றிருந்த சுவைட்சர் தமது இளம் வயதிலேயே ஒரு போதகராக வரவேண்டும் என எண்ணம் கொண்டிருந்தார்.

புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளுக்காகப் பணிபுரிவதையே தமது முதல் பணியாக கொள்ள வேண்டுமென அவர் கருதினூர். ஆனுல் இது அவர் விரும்பியபடி சாத்தியமாகவில்லை, எனவே பிச்சைக்காரர்கள் மத்தியிலும், ஜெயிலிலிருந்து வெளிவந்த முன்னுள் கைதிகள் மத்தியிலும் பணிபுரிந்து வந்தார். இந்தக் கட்டத்தில்தான் ஆபிரிக்காவில் தமது பணிக்கு ஆரம்பிப்பதற்கான யோசனை தோன்றிற்று.

லம்பரீன் கிராமத்தில் தமது வீட்டுக்கு வெளியில் ஒருதிறந்த வெளியில் பெரும்கஷ்டங்களுக்கிடையில் தமது மருத்துவப் பணிகளை அவர் ஆரம்பித்தார்.

கிராமங்களிலிருந்து ஆபிரிக்க மக்கள் பெருந்திரளாக வர ஆரம்பித்தார்கள்.

ஒரு நேர சூசிகையைப் போட்டுக் கொண்டு அதன்படி சிகிச்சை நடத்தினூர்.

முதலாவது உலக யுத்தம் நடந்தது. டாக்டர் சுவைட்சர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். 1917ல் ஐரோப்பாவில் கொண்டுபோய் அவரைக்காவலில் வைப்பது என்று பிரஞ்சு அரசு முடிவு செய்தது யுத்தம் முடியும் வரை இவர் சிறையிலேயே இருந்தார்.

யுத்தம் முடிந்ததும் பழைய இடத்துக்குத் திரும்பிச்சென்ற சுவைட்சர் அங்கு எல்லாமே குளறுபடியாகியிருப்பதைக் கண்டார் மாதக் கணக்காக முயற்சி செய்து மீண்டும் பழைய நிலையை ஏற்படுத்தினூர் 20 ஆண்டுகாலம் டாக்டர் சுவைட்சரின் ஆஸ்பத்திரி அளப்பரிய சேவைகளை ஆபிரிக்க மக்களுக்குச் செய்தது.

இதே சமயம் 20 நூல்களையும் அவர் ஓய்வு கிடைத்தநேரங்களில்எழுதினூர் இவைகளில் பல நூல்கள் லம்பரீனில் அவர் மேற்கொண்ட பணிகளைப்பற்றி பேசுகின்றன.

ஒரு மனிதநேய பண்பாளரின் உண்மையான பணிகள் பற்றி இந் நூல்கள் விபரமாக எடுத்துக் கூறுகின்றன.

(8 ம் பக்கம் பார்க்க)

## நீள்துயரம் தீராமல் இருக்கலாமோ

துக்கமெனும் சாகரத்தில் வீழ்ந்தே நாமும்
துடிதுடித்து மடிகின்ற செய்தி கேட்டும்
வெக்கமின்றி சந்நிதியில் இருப்ப தேனே
வேதனைகள் எங்களுக்குச் சொந்தமாமோ
பக்க மெலாம் பகைவர்களின் கூட்டம் சூழ
பகலிரவாய் பருவலால் மடிவதாமோ
நெக்குருக சந்நிதியில் நிற்போர்க் கென்றும்
நீள்துயரம் தீராமல் இருக்கலாமோ

சந்நிதிக்கோ வருவதற்கு மனமுமில்லை
சஞ்சலங்கள் குறைக்கவொரு வழியுமில்லை
சந்நிதியாய் என்றழைத்துப் பயனுமில்லை
சமரபுரி ஆனதொரு மண்ணின்மீது
என்னிதயம் துடிதுடித்துப் பிழியுதையோ
ஏக்கத்தால் சமுதாயம் இளைக்கலாமோ
நன்னயமாய் ஒருவார்த்தை வின்றுலென்ன
நட்டமுனக் கெமக்கொருகால் நவில்வாயையா

— முருக. வே. பரமநாதன்

○ ○ ○

## நெகிழ்வர் பொற்றுள் சரணம்

சீரெல்லாம் வரிசையெல்லாந் திசைதிசையெல்லாமிருந்து
பாரெல்லாம் கொணர்ந்தணைந்து பணிவினவிப் பரிந்துநிற்க
ஊரெல்லாந் திரளவருள் உழுகுடையாள் உற்பவத்தின்
தூரல்லாந் துளைந்திடறுஞ் சூலிமகா துர்க்கையன்னை
பேரெல்லாம் புகழெல்லாம் பெருகநினைந் திணைமலர்க்கண்
நீரெல்லாங் கசிந்துருக நெகிழ்வர்பொற்றுள் சரணம்!

— மு. கந்தையா

# அன்னை திரேசாவின் விருப்பத்தில் உருவான அநாதைகள் இல்லம்



(கொழும்பு)

புறக்கோட்டை ஸ்ரீகதிரேசன் வீதியிலுள்ள புனித ஆன்ஸ் தேவாலய மிஷனரி இல்லத்தில் அநாதைகள் இல்லமொன்று எதிர்வரும் எட்டாந்திகதி சனிக்கிழமை அன்னை திரேசாவினால்ஆரம்பித்து வைக்கப்படும்.

இப்புனித ஆன்ஸ் தேவாலயம் சுமார் 400 ஆண்டுகள்பழமையானது.கொழும்பில் மிகவும் பின்தங்கிய பகுதியிலேயே இது அமைந்துள்ளது.

அன்னை திரேசாவின் விருப்பத்தின் பேரில் இப் பகுதியில் உள்ள வறிய, நோய்நொடிகளுக்குள்ளான அநாதைகளானவர்களுக்கு உதவும் விதத்திலேயே இத் தேவாலயத்தில் அநாதைகள் இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் அன்னை திரேசாவின் நேரடிக்கண்காணிப்பில் உள்ள விடுதியும், வறியவர்கள், தொழுநோயாளர்கள் அதிகமாகக் காணப்படும் கல்கத்தா மாநகரப்பகுதி யொன்றிலேயே அமைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

# கிராமப் பகுதிகளை வளர்க்க யோசனை

(புலோலி)

''கிராமிய மக்களின் ஒற்றுமை, ஒத்துழைப்பு என்பனவற்றின் மூலமே கிராமப்பகுதிகளின் அபிவிருத்திகளைமேம்படுத்த முடியும். எனவே கிராமப் பகுதிகளில் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டியது கிராமிய மக்களின் கடமையாகும். இக்கிராம மக்களின் ஒற்றுமையினாலேயே இப்பாலத்தைச் சிறப்பாகப் புனரமைக்கமுடிந்தது.''

இவ்வாறு அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் வீதியில் சுமார் ஒருலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமியப் பாலத்தை திறந்து வைத்து உரையாற்றிய யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டார்.

யாழ். அபிவிருத்திச் சபை கட்டைவேலி உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு.எஸ்.தனபாலசிங்கம் தலைமை தாங்கினார். யாழ். உள்நாட்டு, வர்த்தக உதவி ஆணையாளர் எஸ். ரீ. மார்க்கண்டு மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார் தொடர்ந்து உரையாற்றிய திரு. அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டதாவது:-

''கிராமங்களின் தேவைகளை அறிந்தே கிராமங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. முன்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரிலேயே அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனஆனால் தற்போது இம்மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமையினால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கானதிட்டங்களை அபிவிருத்திச் சபை உப அலுவலகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் என்பன வழங்க வேண்டும்.

யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு.எஸ். ரீ. மார்க்கண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

அல்வாய் பிரதேசம் போக்குவரத்து, பொருளாதார நிலைகளில் பின்தங்கியுள்ளது. இப் பகுதியின் நன்மை கருதி இக் கிராமிய பாலத்தை நிறுவியமைக்காக இப்பகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கிராம அபிவிருத்திக்கு அரசின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விசேட நிதி ஒதுக்கப்படவேண்டும்.

# கிராம சேவையாளர்களுக்கு அடையாளப் பட்டி!

[சுண்டிக்குளி]

நாட்டிலுள்ள கிராம சேவையாளர்கள் தம்மை பொதுமக்கள்முன்பாகஅடையாளம்தெரிவிக்கும் பொருட்டு ஒரு பட்டி அணிவிக்கப்படவுள்ளனர். இதற்கான புதிய விதிமுறைகளை உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு.கே,டபிள்யூ. தேவநாயகம் மேற் கொண்டுள்ளார். இதன்படி சகல கிராமசேவையாளர்களும் இப் பட்டியை கடமை நேரங்களில் அணிய வேண்டும்.

## கிளைக்குழு தேர்தல்

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் மூன்று கிளைகளுக்கும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் இம் மாதம் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

## கோரிக்கை

(திருகோணமலை)

மூதூர்த் தொகுதிக்கு தனியான சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரை நியமனம் செய்யும் படி சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தனி வைத்திய அதிகாரி அலுவகத்திற்காக கட்டடம் ஒன்றும் நிறுவப்பட்டும் இன்னும் திறக்கப்படாத நிலையிலே தான் காட்சியளிக்கின்றது.

# யாழ் மாவட்டத்திற்கு விதை நெல் பெறுவதற் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காலபோக நெற்செய்கைக்கு தேவையான விதைநெல் போதுமான அளவு விவசாயிகளுக்கு இல்லாததால் எச். 4, பி. ஜி. 34/6 வர்க்க விதை நெல்லை வேறு மாவட்டங்களிலிருந்து தருவிக்கும் முயற்சியில் பதில் மாவட்ட செயலாளரும் அரச அதிபரும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக ஓரளவு விதைநெல் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

எனினும் தற்போது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் அறுவடைசெய்யப்பட்டு சந்தையில் விற்பனையாகும் நெல்லில் தகுதியான விதை நெல்லை விவசாயிகளுக்கு வழங்க சில ப. நோ. கூ. சங்கங்களும், கமநல சேவை நிலையங்களும் முற்பட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தத்தமது ப. நோ. கூ. சங்கங்களிடமோ, அல்லது கமநல சேவை நிலையங்களுடனோ தொடர்பு கொண்டு பெயர்களைப் பதிவு செய்து விதைநெல்லைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (மா)

## சிறு போக அறுவடை

[நெடுந்தீவு]

சிறுபோக அறுவடையைத் தொடர்ந்து நெல்லின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டங்களில் அறுவடை தொடங்கியுள்ளதால் கூட்டுறவுச்சங்கங்களும் தனியார்வர்த்தகர்களும் போட்டி போட்டு நெல் கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

## நன்கொடைப்பணம் கையளிக்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

யாழ் அபிவிருத்திச்சபையின் பண்டத்தரிப்புகிராம உபஅலுவலகப் பகுதியிலுள்ள 14 சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான அரசாங்க உதவி நன்கொடைப் பணமாக மொத்தம் ஆறாயிரத்து அறுநூறு ரூபா வரையில்கையளிக்கப்படவுள்ளது.ஏ பிரிவிலுள்ள 12 சனசமூக நிலையங்களுக்கு தலா 500 ரூபா விதமும் பி. பிரிவிலுள்ள 2 சனசமூக நிலையங்களுக்குதலா 300 ரூபா விதமும் கணக்கிட்டு இந்த உதவி நன்கொடைப்பணம் சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு விரைவில் வழங்கப்படவிருப்பதாக யாழ் அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு.எஸ். நடராசா தெரிவித்துள்ளார். வங்கிகளில் வேலைகள் வழமைக்குதிரும்பியவுடன், இதற்கான காசோலைகள் சன சமூக நிலையங்களுக்கு கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தக் கோரிக்கை

(மன்னார்)

''மன்னார் பெரியமடு கிராமத்திலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக தொலைபேசி இணைப்பு ஒன்றை ஏற்படுத்தித் தருவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவும்''.

இவ்வாறு கூறும் மகஜர்ஒன்றினை பெரியமடு கிராமஅபிவிருத்திச் சங்கம் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ. எஸ்.குணசிங்கம் மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் திரு.ஏ. ஜெயரட்ணம் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம்.மச்பூல் மன்னார் மாவட்ட தொலைபேசி தொடர்பு அத்தியட்சகர் திரு.ரி.பாலசுப்பிரமணியம் மன்னார் மாவட்ட அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் கே. அக்பர் ஆகியோரிடம் சமர்பித்துள்ளது.

# திருகோணமலை துறைமுக அதிகாரசபைக்கு 5 ஆயிரம் ஏக்கர் காணி சுவீகரிக்கப்படும்!

(திருகோணமலை)

திருகோணமலைத் துறைமுக அதிகார சபையின் பாவிப்புக்கு என்று சுமார் ஐயாயிரம் ஏக்கர் காணி சுவீகரிக்கப்படவுள்ளது. இதற்கான அளவை வேலைகள்முடிவடைந்துள்ளன.

இச்சுவீகரிப்புச்சம்பந்தமான சம்பிரதாயபூர்வமான வர்த்தமானி அறிவித்தலே இனிவெளிவரவேண்டும்.

ஏனைய பூர்வாங்க வேலைகள் இதுசம்பந்தமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை - கண்டிவீதியில் கப்பல்துறை, பாலம்பட்டாறு வரையிலான பிரதேசத்தில் உள்ள சுமார் ஐயாயிரம் ஏச்கர் காணிதான் இத்திட்டத்திற்காக சுவீகரிக்கப்படவுள்ளன.

துறைமுக அதிகார சபையில் வேலைசெய்யும் தொழிலாளருக்கு வீடமைப்புத்திட்டங்கள் தொழில் நிலையங்கள் முதலியன நிறுவ இக்காணிகள் பயன்படுத்தப்படும் என்று சொல்லப்படும்.

இக்காணிகளில் குடியிருக்கும் பலர் வெளியேற்றப்படவுள்ளனர் கப்பல் துறையில் குடியமர்த்தப்பட்டு இருந்த பல தமிழக் குடுப்பங்கள் அண்மையில்அரசு அதிகாரிகள் ஆயுதப்படையினரின் உதவியுடன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் அவர்களின் வீடுகளும் அகற்றப்பட்டன.

இது சம்பந்தமா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறப்பட்டதாக எம். பி.இராமன் என்பவரில் தாக்கல் செய்யப்பட்ட மனுஒன்று விசாரணைக்கு விரைவில் வர உள்ளது.

திருமலை அரசாங்க அதிபர் திருமலை இணைப்பு அதிகாரி ஆகியோரை பிரதிவாதிகளாக

(8-ம் பக்கம் பார்க்க)


அமெரிக்கா ✶ கனடா ✶ ஜேர்மனி
✶ பிரான்ஸ் ✶ இத்தாலி
போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்,
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689


## அண்ணன் கண்டிப்பைத் தாங்காத தங்கை வாழ்வைமுடித்தார்

[கிளிநொச்சி]

அண்ணனின் சைக்கிளில் மிகுந்த ஆசையுடன் ஓடிய இளம் யுவதியான தங்கை அண்ணனின் கண்டிப்பை பொறுக்காது யாருக்கும் தெரியாதவிதத்தில் நஞ்சிடம் தஞ்சமடைந்து தனது வாழ்வை முடித்துக்கொண்டார்.

வன்னி விளான்குளம் கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வந்த மாப்பாணபிள்ளை பரமேஸ்வரி [19-வயது]என்பவரே

[8-ம் பக்கம் பார்க்க]

# “கஷ்டங்களுக்கு மத்தியிலும் சிறப்பான சேவை!”

## கூட்டுறவுச் சங்கப் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் பாராட்டு

(ஊரெழு)

“கூட்டுறவு அமைப்பின் மூலமே பொது மக்கள் அதிக பயனைப் பெற்றுக் கொள்ள முடிகிறது இன்றுள்ள பல சிரமங்களுக்கு மத்தியில் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் செயற்படுவதைக் கண்டு பாராட்ட வேண்டும் பொது மக்களின் தேவையே தனது சேவையாகக்கொண்டு சிறப்பாக இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களுள் சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தையும் ஒன்றுகக் குறிப்பிடலாம். இச் சங்கம் அதிகமான கிளை விற்பனை நிலையங்களை நிர்வகித்து வருவது மட்டுமன்றி தனது நிர்வாக எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கிராமங்களிலும் உப மொத்த விற்பனை நிலையங்களை நிறுவி இதன் மூலம் கிளை விற்பனை நிலையங்கள் தாமதமின்றி பொருட்களை கொள்வனவு செய்து பொது மக்களின் தேவைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பதற்கு வசதி செய்து கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது”

இவ்வாறு புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் அமைக்கப் பட்டுள்ள சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உப மொத்த விற்பனை நிலைய புதிய கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசிய மானிப்பாய் முன்னுள் எம்.பி வி. தர்மலிங்கம் கூறினுர்.

சங்கத்தின் இயக்குநர்சபைத் தலைவர் திரு,சி. குமாரவேல் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு.எம்.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். விழாவின் ஆரம்பத்தில் இயக்குநர் சபை உறுப்பினர் திரு வே. செல்லையா (சமாதான நீதவான்) மங்கள விளக்கேற்றி வைத்ததுடன், ஆசிரியர் திரு. சி. செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

தலைவர் திரு. குமாரவேல் பேசும்போது, “நாட்டின் அண்மைக்கால நிகழ்ச்சிகளால் ஏற்பட்ட பெரும் கஷ்டங்களுக்கு மத்தியிலும் இது போன்ற முன்னேற்றமான காரியங்களைச் சாதித்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அண்மையில் நமது சங்கத்திலிருந்து பெருந் தொகைப் பணம் கொள்ளையடிக்கப்பட்ட போதிலும் நமது முயற்சியில் மனந்தளராது ஈடுபட்டு முன்னேறி வருவதற்கு இயக்குநர் சபை உறுப்பினர்களும், சங்க உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் வழங்கி வரும் ஒத்துழைப்பும் உதவியுமே காரணமாகும். எமது சங்கத்தின் சொந்தப் பணத்திலிருந்து இந்தப் புதிய கட்டிடம் அமைககப்பட்டிருப்பது சிறப்பாகக் குறுப்பிடத்தக்கது” என்று கூறினுர்

சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் வலி, தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. சி. செபநாயகம், மற்றும் கூட்டுறவு உயர் உத்தியோகத்தர்கள் உட்படமேலும் பலர் மேற்படி திறப்புவிழா வைபத்தில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினுர்கள். சங்கத்தின் கணக்காளர் திரு. மகாதேவா நன்றியுரை வழங்கினுர்.



பிரான்ஸில் உயர உதைத்தலுக்கான உலக சாதனையை ‘கின்னஸ்’ புத்தகத்தில் பதித்துக் கொண்ட வண்ணர் பண்ணையைச் சேர்ந்த அ. ஸ்ரீகாந்தருஜா பாரிஸில் தமக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதை இங்கு காணலாம்.

## மன்னர் மாவட்டத்தில் ரூபா 35 கோடி செலவில் அபிவிருத்தி வேலைகள்!

(மன்னர்)

உலகவங்கியின்ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மன்னர் மாவட்டத்தில் 35கோடி ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும். இவ்அபிவிருத்தி வேலைகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டு 1988ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படும்

இவ்வாறு மன்னர் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய மன்னர் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டபணிப்பாளர் திரு. எ. ஜெயரட்ணம் தெரிவித்தார்.

இக்கூட்டம்அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா தலைமையில் பெரியமடு மகா வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்னர் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய திட்டபணிப்பாளர் அபிவிருத்தித் திட்டத்திற்கென வருடம் ஒன்றிற்கு 7கோடி ரூபாவீதம் 5வருடத்தில் மொத்தம் 35கோடி ரூபா செலவிடப்படும். இத்திட்டத்தின்கீழ் மன்னர் மாவட்டத்தில் 5பெரிய குளங்களும் 60 சிறிய குளங்களும் புனரமைக்கப்படும்.

பெரியமடு குளத்தை புனரமைக்கவென 5வருடத்தில் 60லட்சம் ரூபா செலவிடப்படும்.

இதில் இவ்வருடம் 12லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படும்

தற்போது பெரியமடு குளத்தைச்சுற்றி வான்கட்டும் வேலைகள் நடைபெற்றுவருகிறது.

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—14(04-09-1984)
வாரம்—செவ்வாய்
திதி—நவமி காலை 8-14ன் மேல் தசமி
நக்ஷத்திரம்—மூலம் இரவு 10மணி வரை

மேடம்:- காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும் இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நீண்ட பிரயாணம் குறித்து திட்டமிடப் படலாம்.

இடபம்:- இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் காலடியில் சரண் அடையும் பரோபகாரச்சிந்தை மேலிடும் நண்பர் ஒருவருக்கு கை கொடுத்து உதவுவீர்கள்.

மிதுனம்:- பணப் பலவழிகளிலும் செலவாகும் அண்ணியநபர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவுபார்ப்பர்.

கடகம்:- நம்பிக்கைமோசடி மூலம் நலிவுகள் தென்படும் நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும் தொழில் புரியுமிடத்தில் சிலரின் எதிர்ப்புக்கும் ஆளாகலாம் நிதானம் நன்று

சிங்கம்:- பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்குமிடம் உண்டு தெய்வநம்பிக்கையில் ஆர்வம் ஏற்படும் புண்ணியகாரியங்களை மனம் நாடும் நீண்டநாள் மனக்குறை ஒன்று நிவர்த்தியாகும்.

கன்னி:- தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் வணிகத்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும் சிலருக்கு நன்மையான இடமாற்றம்முமுண்டு.

துலாம்:- நீண்டநாள் எதிர்பார்த்த நிதி வசதி இன்று கிடைக்கலாம் வாழ்க்கைதிருப்திகரமாகத் இருக்கும் பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமைதரும்.

விருச்சிகம்:- கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம்உண்டு வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கும் கடமையில் ஆர்வம் பிறக்கும் நிம்மதியான தினம்.

தனுசு:- இன்னலின் பின்னலால் இதயபாரம் ஏற்படும் சிறுவிடயங்களுக்குக் கூட குறை கேட்க நேரிடலாம் பெரியார் ஒருவருடன் அபிப்பிராயம் பேதம் தோன்றும்.

மகரம்:- பணவிவகாரத்தில் திருப்திகரமான நிலை தென்படும் அதிகசிந்தனை அமைதியைக் கெடுக்கும் முன்னேற்றமான காரியங்களில் தடையேற்படும்.

கும்பம்:- பக்கத்திலே படுகுழி தோண்டுவதற்குஎதிரிகள் முனைவர் பணவிவகாரத்தில் மோசடி நடக்கலாம் ஆணவப் போக்கினுல் ஆபத்துக்கள் ஏற்படலாம் அடக்கம் வேண்டும்.

மீனம்:- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும் மேலிடத்துச் செல்வாக்கு பாதிக்கப்படக்கூடும் அயலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும் நிதானம் நன்று.

திருமலை ரவீந்திரன்

## 6 மாதமாகியும் கிடைக்கவில்லையாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியிலிருந்து கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் கடவுச் சீட்டு பெறுவதற்காக விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கு இதுவரை கடவுச் சீட்டு கிடைக்கவில்லை என்று புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடிவரவு குடியகல்வு பிராந்திய அலுவலகத்தில் கடந்த யார்ச் மாதத்தில் தங்கள் கடவுச் சீட்டு விண்ணப்பங்களை சரிவர ஒப்படைத்தவர்களுக்கு இதுவரை கடவுச் சீட்டுகள் கொழும்பிலிருந்து அனுபபி வைக்கபட வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6-ம் தரப் பிரவேசப் பரீட்சை 1985

மேற்படி பரீட்சை 1984-11-24ந் திகதி சனிக்கிழமை பின்வரும் பாடசாலைகளில் குறித்தொதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ். பிரதேச கல்வித் திணைக்களத்திலுல் நடாத்தப்படும்.

1. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
2. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி,
3. கொக்குவில் இந்துக் கல்லூரி,
4. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
5. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி,
6. சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
7. தெல்லிப்பழை மகாஜனுக் கல்லூரி,
8. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,
9. வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி ம.ம.வி.
10. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி,
11 பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி,
12. நெல்லியடி ம. ம. வி.,
13 வசாவிளான் ம. ம. வி.,

பின்வரும் மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி அதிபர்களால் 1984-10-19ந் திகதி வரை ஏற்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் பிரவேசக் கட்டணம் ரூபா 3/- விண்ணப்பிக்கும் பாடசாலை அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1984-09-03.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

அதிபர்,
யா/ ..........................................................

### யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் 6–ம் தரப் பிரவேசப் பரீட்சை 1985

1. மாணவர் பெயர்:.
2. பால்:-
3. பிறந்த திகதி:-
4. தற்போது படிக்கும் வகுப்பு:-
5. தற்போது படிக்கும் பாடசாலை:-
6. சாகியம்:-
7. சமயம்:-
8. பெற்ருர்/பாதுகாவலர் பெயர்:-
9. முகவரி (நிரந்தரம்) :-
10. பிரவேசம் விரும்பும் பாடசாலைகள்:- 1.
 2.

(விண்ணப்பம் அனுப்பும் பாடசாலை தவிர்ந்த தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் இரண்டின் பெயரையே குறிப்பிடல் வேண்டும்.)

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்

மாணவர் கையொப்பம். பெற்ருர் / பாதுகாவலர் கையொப்பம்.

.............................. ..............................

### மாணவர் தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதியுரை

மேற்படி மாணவன் / மாணவி தற்பொழுது 5ம் தரத்தில் படிக்கின்ருர் எனவும். 19........................ திகதி பிறந்தவர் என்பது பாடசாலையிலிருக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரப் படி சரியெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.............................. ..............................

பாடசாலையின் பெயர். அதிபரின் கையொப்பம்.
திகதி: (1595)

## விதைநெல் விநியோகம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி, கைதடி கமநல சேவையினர் இப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் நன்மை கருதி, விதை நெல்லை விநியோகித்து வருகின்றனர்.

விதை நெல் தேவைப்படுவோர் அவ்வப்பகுதி விவசாய உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு பெறலாம் என கமநலசேவை நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Shanthi (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color)
(Action Thrilling Suspense)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
அசோகன்
நல்வரவு

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி
(புத்தம் புதிய பிரதி-கலர்)

ரீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Robert Shaw...
FORCE 10 FROM NAVARONE
(War Film)

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
எம்.ஜிஆர். - ஜெயலலிதா
நம்பியார்
அன்னமிட்டகை
[புதிய பிரதி]

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
மனோகரா
(புதிய பிரதி)

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
ஜெய்சங்கர்
நீ ஒரு மகராணி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-15, 6-30
Hijack Savoy
(Action packed-Thrill)

அரச ஊழியரின் வேதனத்திற்கென

# கூட்டுறவுச் சங்கம் ரூ.10 லட்சம் வழங்கியது

(சாவகச்சேரி)

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள சகல அரச திணைக்களங்களின் ஆகஸ்ட் மாதச் சம்பளப் பணமாக ரூபா பத்து லட்சத்தினை சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் வழங்கியுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் திரு. எஸ்.வீ. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் வங்கிகள் இயங்காமல் இருந்தமை காரணமாக அரசு ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் பலத்த கஷ்டத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தனர். இவர்களுடைய நிதிக்கஷ்டத்தினைப் போக்கும் பொருட்டு, சாவகச்சேரி மக்கள் வங்கியினரின் அனுசரணையுடன், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இவ்உதவியை வழங்கியமையை அரசு ஊழியர்கள் யாவரும் பாராட்டியுள்ளனர்.

ஒருமாதத்தில்

# குடியேறு விட்டால் வீடுகளை இழப்பர்!

(திருகோணமலை)

உப்புவெளியில் உள்ள மீனவ வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளைப் பெற்ற தமிழ் மீனவர்கள் அவ் வீடுகளில் இன்னும் ஒரு மாதத்தில் குடியேறு விட்டால் வீடுகளை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள்.

இவ் வீடமைப்புத் திட்டம் சிறிமவோபுரம் மீனவர் வீடமைப்புத் திட்டத்திற்கு எதிரில் அமைந்துள்ளது.

1983 ஜூன் வன்செயலுக்கு முன்னர் சிலதமிழ் மீனவர்கள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட வீடுகளில் குடியேறியிருந்தனர்.

1983 ஜூன் வன்செயலின் போது அப்படிக் குடியேறிய தமிழ் மீனவக்குடும்பங்களில் ஒன்றான ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் திரு.கே ஆழ்வாப்பிள்ளையும் அவரது மகன் ரமணிகரனும் காடையர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து இவ்வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் குடியிருந்த சிலதமிழ் மீனவக்குடும்பங்கள் பயங்காரணமாக வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து விட்டனர்.

## தேங்கிக் கிடக்கிறது

(மாவிட்டவுரம்)

தோலகலட்டி கிறிஸ்தவ தேவாலயத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தேவாலய மடத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லிரசம், வைன் போன்ற பொருட்கள் நல்ல விலையில் விற்பனை செய்யப் பட்டு வந்தது.

தற்சமய சூழ்நிலையில் மேற்படி பொருட்கள் விற்காமல் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியாவில் அடிக்கடி தலைதூக்கும் வதந்திகள்

(வவுனியா)

வவுனியாநகரில் அடிக்கடி உண்மைக்குப் புறம்பான செய்திகள் வதந்திகளாகப்பரவுகின்றன! ஆனாலும் இந்த வதந்திகளைப்பரப்புவோர் யார் என்பதுதான் கண்டுபிடிக்கப்படவில்லை!

பொய் வதந்திகள் பரப்பப்படுவதினால் இப்பகுதி மக்கள் பீதியும், அச்சமும் அடைகின்றனர்.

கடந்தவாரம் உண்மைக்குப் புறம்பான வதந்தி வவுனியாவில் பரப்பப்பட்டது. இந்த வதந்தி மக்களை பெரும் அச்சத்துக்குள்ளாக்கியது! இப்பகுதி மக்களை பயமுறுத்தும் நோக்குடனே தான் பொய் வதந்திகள் பரப்பப்படுவதாகத் தெரிகின்றது.

# “அமைதியான வாழ்வுக்கு பக்திமார்க்கமே சிறந்தது”

(கிளிநொச்சி)

“உலகில் உள்ள மார்க்கங்களில் பக்திமார்க்கமே சிறந்ததாகும், பக்திமார்க்கம் மூலம் எதையும் சாதிக்கமுடியும். அமைதியான வாழ்விற்கு பக்திமார்க்கமே சிறந்ததாகும்”

இவ்வாறு கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தில் நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்திதின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் எழுத்தாளரும் கவிஞருமான கோப்பாய் சிவம் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப ஆலய பிரதம குரு சிவசாமி சர்மா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பெருந்திரளான அடியார்கள் கலந்துகொண்டனர்.

திரு. கோப்பாய் சிவம் மேலும் பேசுகையில்: கிருஷ்ண வழிபாட்டின்மூலம் சிறந்த பெறுபேறுகளை அடையமுடியும், பலவழிகளிலும் சிறப்புற்று விளங்கும் கிளிநொச்சி பிரதேசத்தில் கிருஷ்ண ஆலயம் ஒன்று அமைந்தது சாலச் சிறப்பானதாகும்.” என்றார்.

இந்து போதகர் திரு. எஸ். சுந்தரராசன், சமயத்தொண்டர் கே. வைத்திலிங்கம், இந்து இளைஞர் கலாச்சார மன்றச் செயலாளர் திரு. கனேஸ்வரன், ஆலய பரிபாலன சபை செயலாளர் பஞ்சலிங்கம், ஆசிரியை திருமதி இராசம்மா ஆகியோரும் உரையாற்றினர்கள்.

## வானொலியில் இன்று

காலை
- 5-30 நாதாஞ்சலி
- 5-35 திருமுறைப்பாடல் என். பரமசாமி
- 6-00 சைவநற்சிந்தனை
- 6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
- 6-10 அறநெறிஆரம்
- 6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
- 6-30 செய்திகள்
- 6-40 அறிவிப்புகள்
- 6-50 மெல்லிசைப்பாடல்
- 6-55 போதிமாதவனின் போதனைகள்
- 7-00 புல்லாங்குழல் பி. என். சுரேஷ்
- 7-30 மாகாணச் செய்திகள்
- 7-35 இசையமுதம்
- 8-05 வாத்திய மஞ்சரி
- 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
- 8-45 காலை ஒலிபரப்புமுடிவு

மாலை
- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6.15 புராணபோதம்
- 6-30 மெல்லிசை சந்திரிகா டி அல்விஸ்
- 6-45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி

இரவு
- 7-00 களத்துமேடு
- 7-15 முகத்தார் வீட்டில்
- 7-30 உலகச் செய்திகள்
- 7-40 நாட்டுப்பாடல்
- 7-45 நடவு சித்திரம் ‘வாழ்வளிக்கும் மகாவலியாள்’’
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 9-00 செய்திகள்
- 9-10 செய்தியின் பின்னணியில்
- 9-15 அறிவிப்புகள்- பக்திப் பாடல்கள்
- 9-30 பாட்டு எஸ். கணபதிப் பிள்ளை
- 10-30 பஜன்
- 11-00 ஒலிபரப்பு முடிவு

## குண்டெறிதல்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

காவற்றுறையைச் சேர்ந்த அ.ப.செபமாலைமுத்து குண்டெறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.



(சாவகச்சேரி)

நுணுவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தான பரிபாலகரும் சுமார் 40 ஆண்டுகட்கு மேலாக மேற்படி ஆலய அர்ச்சகராக இருந்தவருமான மு. பொ.சபாபதி (குருசுவாமி) அவர்களின் ஒன்பதாவது நினைவு தினம் இன்று பக்தி பூர்வமான நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்படவிருக்கிறது. அன்னாரின் பெயரில் கைதடி, நுணுவில், சாவகச்சேரி மக்களால் விசேட அபிடேக ஆராதனைகளும் திருமுறைஓதுதலும் இடம் பெறும். ஊர் மக்கள் சார்பில் எடுக்கப்படவிருக்கும் இவ் விழாவினை அடுத்து மகேஸ்வர பூசையும் இடம் பெற ஏற்பாடாகி இருக்கிறது.

இரண்டு மகன்கள் பார்த்துத் துடிதுடிக்க

# யானை தந்தையை மிதித்து கொன்றது

(திருகோணமலை)

இரண்டு மகன்கள் பார்த்து கொண்டிருக்க யானை தகப்பனை மிதித்துக் கொன்ற பரிதாப சம்பவம் வேப்பங்குளம் என்ற இடத்தில் இடம்பெற்றது.

35 வயது நிரம்பிய ஏ. தர்மதாஸ என்பவரின் மரண விசாரணையில்இத்தகவல்வெளியானது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி யு.பி.குணசேகரா மரண விசாரணையை நடத்தினர்.

12 வயதான சம்பத் ஸ்ரீ தினேஷ்குமார சாட்சியமளிக்கையில் ‘சம்பவ தினம் காலை இறந்த எனது தந்தையுடன் வயலுக்குச் சென்றுகொண்டிருந்தேன். 9வயதுத் தம்பியும் எம்முடன் வந்தான். இடைவழியில் காட்டு யானை ஒன்று எதிர்ப்பட்டது. நானும் தம்பியும் ஓடிப்போய் பற்றை மறைவினுள் பதுங்கிக் கொண்டோம். ஆனால் தந்தை யானையிடம் சிக்கிக் கொண்டார் அவரால் தப்பி ஓட முடியவில்லை. யானை அவரைக் காலால் மிதித்துக் கொன்றதை பற்றை மறைவினுள் பதுங்கியிருந்த வண்ணம் நான் கண்டேன்’’ என்றார். விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

## மூதாட்டியை மோதிக் கொன்ற உல்லாசப்பயணி தலைமறைவு!

[மட்டக்களப்பு]

மகளுடன் சமூகசேவை உதவிப்பணம் எடுக்கச் சென்ற எண்பது வயது மூதாட்டியை மோட்டார்சைக்கிளால்மோதிவிட்டு தலைமறைவாகியுள்ள மேற்குஜெர்மன்உல்லாசப பிரயாணிமீது மரணவிசாரணை அதிகாரி பிடிஆணை பிறப்பித்துள்ளார்.

இச்சம்பவம் பொத்துவில் என்ற இடத்தில் நடைபெற்றது. பொத்துவில் 1ம் பிரிவு வாசியான கலந்தர் ஆசியத் உம்மா [80 வயது] மூதாட்டிதான்இவ்விபத்தில் பலியானார்.

மேற்படி மரணம் குறித்து மட்டக்களப்புநகர மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் மரண விசாரணை மேற்கொண்டார்.

காலஞ் சென்றவர் சம்பவ தினம் தன் மகளுடன் உதவிப் பணம் எடுக்க உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் சென்ற போதே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை முடிவில் விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கிய மரணவிசாரணை அதிகாரி மேற்கு ஜெர்மன்வாசியை உடனடியாக கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## யாழ்.செல்ல பெற்றோர் மறுப்பு: மனமுடைந்தவர் தற்கொலை

(மட்டக்களப்பு)

யாழ்ப்பாணத்தில் வேலை செய்த மகனை பெற்றோர் மீண்டும் வேலைக்கு செல்ல அனுமதிக்காததால் மனமுடைந்த மகன் கிருமிநாசினி அருந்தி தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

இச் சம்பவம் மட்டக்களப்பு இருதயபுரம் என்னுமிடத்தில் நடைபெற்றது. க.பேரின்பராசா (16வயது) என்னும் இளைஞர் தான் இவ்வாறு தன் உயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

காலஞ்சென்றவர் மரணம் குறித்து மரண விசாரணை அதிகாரி திரு.த.சிவநாதன் மரண விசாரணை மேற்கொண்டு முடிவில் தற்கொலை என தீர்ப்பு வழங்கினர்.

# திருமலையில் சிங்கள அதிகாரிகளுக்கு தமிழ் மொழித் தேர்ச்சி வகுப்புகள்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழிச்சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்கு முன்னேடியாக திருமலையில் பணிபுரியும் சிங்கள அதிகாரிகளுக்கு தமிழ்மொழித்தேர்ச்சி பெற வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கு ஏதுவாக திருமலை மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தமிழ் மொழி அபிவிருத்திப் பிரிவுஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பில் கூறப்பட்டுள்ள தமிழ் மொழி சட்டவிதிகளை அமுல்நடத்துவது எப்படி என்று ஆராயக் கூட்டப்பட்ட கூட்டத்தில் மேற்கண்ட பிரிவு அமைக்கப்பட்டது.

கூட்டத்திற்கு அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்ணண்டோ தலைமைதாங்கினுர்

## திருமலை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி இந்த அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இத்னிடையில் சுவீகரிக்கப்பட்டுள்ள ஐயாயிரம் ஏக்கர் காணியையும் அத்துமீறிக் குடியேறுவோரிடமிருந்து பாதுகாப்பதற்காக துறைமுக அதிகாரசபை 50 பாதுகாப்புஉத்தியோகத்தர்கள் வரை நியமித்துள்ளது.

இப்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கொழும்பில் நியமனம் பெற்று திருகோணமலை வந்துள்ளனர்.

## உயிர்களை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது பணிகள் சர்வதேச கவனத்தைக்கவர்ந்தது. 1952ம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. உயிரினங்களை உயர்வாக மதித்து அவ்வுயிர்களின் மேம்பாட்டுக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணித்த அப்பெரியார் நீண்டகாலம் வாழ்ந்த பின் மரணமானுர். ஆபிரிக்க மக்கள் தங்களின் 'அப்பா' மறைந்து விட்டார் என்றுகூறியே அஞ்சலி செலுத்தினுர்கள்.

உயிர்களிடத்தில் உன்னதமான அன்பைச் செலுத்திய டாக்டர் சுவைட்சர் கொல்லாமை பற்றி திருக்குறளில் பேசப்படுவது பற்றி கேள்விப்பட்டு, தமிழ் கற்று திருக்குறளையும் ஆய்ந்தறிந்தார் என்று கூறப்படுகின்றது.

## அண்ணன்

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

மரணமானவராவார்.

இவரது மரணம் சம்பந்தப்பட்ட விசாரணையை கிளிநொச்சிப்பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோ. சலிங்கம மேற்கொண்டார் சடல பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சிறிசுந்தரி தேவதாசன் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் என். இராசசேகரம் ஆஜர் செய்தார்.

மரணமான பரமேஸ்வரியின் தாய் மா. புவனேஸ்வரி சகோதரன் மா. கதிர்காமநாதன் ஆகியோரும் சாட்சியமளித்தைத்தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தீர்ப்பு வழங்கினுர்.

## தலைவராகத் தெரிவு

[சித்தன்கேணி]

வட்டு மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திரு வல்லிபுரம் யோகானந்தசிவம் சங்கானை ப நோ கூ.ச. சமாசத்தின் இயக்குநர் சபைத தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்

# காரைநகர் சம்பவம்: இயக்கம் உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த இருவரின் மரணங்களுக்கும், 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' உரிமைகோரித் துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளது.

''முட்களைக் களைந்து விடுதலையை முன்னெடுப்போம்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அப்பிரசுரத்தில் ''இயக்கம் செயற்பட்டுவரும் இக்காலகட்டத்தில், இயக்கத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பட்ட காரைநகரிலுள்ள வேதரடைப்பைச் சேர்ந்த அருளானந்தம் சக்திவேல் (சிவா), ஆலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி கனகலிங்கம் (லிங்கன்) ஆகிய இருவருக்கும் முழுமையான விசாரணையின் பின் 1-ம், 2-ம் திகதிகளில் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.'' என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.

''வலந்தலை இந்துமதி கொலை, ஆலடி செல்லப்பா ஸ்ரோர்ஸ் கொள்ளை, வேரிப்பிட்டி தவறணைக் கொள்ளை, காரைநகர் ப. நோ. கூ, ச. கொள்ளை முயற்சி, புதுரோட் கந்தசாமி வீட்டில் கொள்ளை முயற்சி, அத்துடன் மேற்படி கொலை, கொள்ளைகளில் திட்டமிட்டு ஈடுபட்ட இவர்கள் இயக்கத்துக்காகவே இவை செய்யப்படுகின்றன என்று வேறு சில நபர்களையும் நம்பச்செய்து அவர்களையும் இச் சம்பவங்களில் ஈடுபடுத்தியமை'' என்றும் மேற்படி பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மரணதண்டனை வழங்கப்பட்ட இருவரினுலும் ஏமாற்றப்பட்டு, மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் ஈடுபட்ட ஏனையோர் விசாரணையின் பின்னர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(மா)

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரித்தார்கள் மல்லாகம் சட்டத்தரணிகள் சங்க தீர்மானத்தின்படி இப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது இம்மாதம் 7ம் திகதி வரை பகிஷ்கரிப்பு நடைபெறும்.

சாவகச்சேரி நீதிமன்றத்தை பகிஷ்கரிப்பது பற்றி சட்டத்தரணிகள் இன்று முடிவு செய்வார்கள் என்று சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தை பகிஷ்கரிப்பது பற்றியும் சட்டத்தரணிகள் இன்று முடிவு செய்வார்கள்.

# இப்படியும் நடக்கிறது

இரண்டு ஆண்டுகள். அதாவது. இருபத்துநான்கு மாதங்கள்.

'அணு அணு'வாகக் கஷ்டப்பட்டு - உழைத்து வைப்பதில், எறும்புகள் கூடத் தோல்வியைத் தழுவும்வகையில் இயந்திரமாகச் செயல்படும் இளைஞர்களில் இவரும் ஒருவர்.

இளமை - மனைவி - எத்தனையோ எதிர்காலக் கனவுகள், இத்தனைக்கும் மத்தியில்; பிஞ்சுக் கைகளை நீட்டி 'அப்பா' என்று அழைக்கும் குழந்தையின் நினைவுகள்.

சவூதியில் இருபத்து ஏழு மாதங்கள் வேலைபார்த்து, ஒருமாத லீவில் ஊர்திரும்பும் அந்த இளைஞர், கொழும்பிலிருந்து நேராக ரயிலில் யாழ்ப்பாணம் வந்து, யாழ். ரயில் நிலையத்திலிருந்து வாடகைக் காரில் சொந்த ஊர் திரும்பும் வழியில் புதிய புதிய ஆசைகளில் கடையில் ஏறி இறங்குகின்ருர்.

'ஏதோ ஏதோ' வாங்குகின்ருர். மீண்டும் அதேகாரில் வீட்டுக்குப் புறப்படுகின்ருர்.

காரிலிருந்து இறங்கியதும் எத்தனையோ ஆசையுடன் வீட்டுக்குள் நுழையும் அவர், கைப்பையைப் பார்க்கின்ருர். 'தேள்' கொட்டுகிறது! கைப்பையைக் காணவில்லை!

ஏராளமான அமெரிக்க டாலர்கள், இலங்கைப்பணம்-ஆயிரக் கணக்கில், சவூதிப்பணம், தங்கச் சங்கிலி, கடவுச் சீட்டு, விமானப் பயணச் சீட்டு ... இப்படி எத்தனை எத்தனையோ!

பாவம் இந்த இளைஞர். வெளிநாட்டில் சேர்த்து வைத்த எல்லாவற்றையுமே இழந்து வீடு திரும்பியிருக்கும் நிலையில்...... போனுல் போகட்டும் போடா...... என்று சேர்த்த லட்ச ரூபா சொத்தையெல்லாம் மறந்து விட்டு, ''என்னுடைய கடவுச் சீட்டும், விமானப் பயணச் சீட்டும் மட்டுமாவது கிடைக்காதா? நான மீண்டும் வெளிநாடு சென்று வீட்டில் தீபம் ஏற்றிவைக்க...'' என்று கண்ணீர்- மன்னிக்கவும் செந்நீர் விடுகின்ருர்.

இளைஞர்- மயிலிட்டி தி. மோகனதாஸின் எதிர்காலத்துக்கு யார் ஒளிஏற்றி வைக்கப் போகின்ருர்கள்? யாழ்ப்பாணம் மேலும் ஒருபடி உயருமா?

— ஊருடுவி



மாணவர்கள் அனுவசிய முறையில் தாக்கப்படுவதைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டத்தில் மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தது தெரிந்ததே. மானிப்பாயில் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தது டன், சுலோகங்களைத் தாங்கி. மறியல்போராட்டமும் நடத்தினர். அவர்களில் ஒரு பகுதியினரை இங்குகாணலாம்.

## பி. எஸ். செட்டியார்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிய திரு. ஜோன் பொஸ்டர் டல்லஸ் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது ''உங்கள் மூதாதையருக்கும் யாழ்ப்பாணத்தாருக்கும்தொடர்புண்டு. அவர்கள் வாழ்ந்து முடித்த இடம் இதுதான்'' என்று கூறி இதனை நிரூபிக்கும் வகையில் புகைப்படங்கள் அடங்கிய கோவை ஒன்றை வழங்கி திரு. டல்லஸை ஆச்சரியத்துக்குள்ளாக்கி பிரமிக்கவைத்தவர் திரு. செட்டியார்.

தமது இறுதிக்காலத்தில் பல்வேறு வகையில் 'ஈழநாடு'க்குப் பணிபுரிந்த திரு. செட்டியார் தமது சமயப்பணியை, நீராவியடி கடையிற்சுவாமிகள் ஆலயத்திருப்பணி வேலைகளுக்கு முழுமையாக அர்ப்பணித்து பெருந்தொண்டாற்றினுர் ஆலய மகாகும்பாபிஷேகம் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்குப் காலத்திலேயே அவர் அமரத்துவம் பெற்றுவிட்டடர்.

தகனக்கிரியைகள் நேற்று முன்தினம் லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றது.

## பருத்தித்துறை....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கம், உபதலைவர் எஸ். ராஜேந்திரா, வி. தங்கராசா, சி. பாலசிங்கம் ஆகியோரடங்கிய குழுவே நேற்று அரச அதிபரைச்சந்தித்தது.

குழுவின் அமைப்பின்பேரில் அரச அதிபர் கல்லூரிக்கு நேரில் சென்று சேதவிபரங்களை நேற்றுபார்வையிட்டார்.

## வழக்குகள் ஒத்திவைப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நூலகத்திற்குக் காலையில் வந்திருந்தபோதும், வழக்குகள் விசாரணைக் கெடுக்கப்பட்டபோது நீதிமன்றத்தில் அவர் ஆஜராகவில்லை.

வெற்றிலைக்கேணி கொலை வழக்கு இம்மாதம் 7ந்தேதியும் துன்னுலைக் கொலைவழக்கு இம்மாதம் 24ம் திகதியும் ஒத்திவைக்கப்பட்து. மேல்நீதிமன்றத்திற்கு ஜூரி சபையினரும், சாட்சிகளும் வந்திருந்தனர்.

யாழ். மாவட்ட நீதிமன்றம் பதில் மாவட்ட நீதிபதி விஜெகசோதி முன்னிலையில் நேற்றுக்காலை கூடியது சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றத்திற்குள் வரவில்லை. விசாரணை எதுவும் நடைபெறவில்லை. சில வழக்குகளில் கட்சிக்காரரும் வரவில்லை வழக்குகள் ஒத்திப்போடப் பட்டது.

யாழ், நீதவான் நீதிமன்றம் திரு. எஸ். நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை கூடியது. சட்டத்தரணிகள் எவரும் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

சில வழக்குகளில் எதிரிகளும் மற்றும் சில வழக்குகளில் சாட்சிகளும் வரவில்லை. சில வழக்குகளில் சாட்சிகளுக்கு கட்டளை கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றம் வராத எதிரிகளுக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

நிதிமன்றங்களை பகிஷ்கரித்த மற்றும் சட்டத்தரணிகள் சட்ட நூலகத்தில் இருந்தனர் சிலர் நிதிமன்றவளவிலும் காணப்பட்டனர்.

வீதியின் மறுபுறத்தில், நிதிமன்றம் வந்த கட்சிக்காரர் களும, பொதுமக்களும் பார்த்துக்கொண்டு நின்ருர்கள்.

(சு)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984 ஆண்டு செப்டம்பர் மாதம் 4 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu Telephone: 22389 — 24126